2010 மே 7] [திரு. கே.என். நேரு]

முழுவதும் ஒரே மாதிரியான கட்டண வசூல் அமைக்கப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மத்திய அமைச்சரும் அழைத்து, அதைப் பற்றி ஆலோசித்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதிலேதான் National Permit என்பதில் இன்றைக்கு அந்தப் பேச்சுவார்த்தையிலே ஒரு உடன்பாடு ஏற்பட்டு, 15 ஆயிரம் ரூபாய் கட்டினால் இந்தியா முழுவதும் எங்கு வேண்டுமென்றாலும் போகலாம் என்ற முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்ததாக இது வந்திருக்கிறது. எனவே, விரைவில் நல்லதொரு முடிவு ஏற்பட இந்த அரசு தொடர்ந்து முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) பள்ளிகளில் கல்விக் கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பள்ளிகளெல்லாம் கல்விக் கட்டணத்தை அதிகமாக வசூலிக்கின்றன என்கிற ஒரு கருத்து வந்த பிறகு, நம்முடைய தமிழக அரசு இதற்காக ஒரு குழுவை அமைத்து, முன்னாள் நீதிபதி கோவிந்தராஜன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவைப் போட்டு, அந்தக் குழுவும் பரிந்துரை செய்து, தமிழக அரசின் இந்தச் சட்டமன்றம் இயற்றிய சட்டம், அதாவது கல்விக் கட்டண வரன்முறைச் சட்டம் செல்லும் என்று தீர்ப்பு வழங்கிய பிறகும்கூட, இன்று பல பள்ளிகள், நீங்கள் அரசு-மே மாதம் 15 ஆம் தேதி வரை application கொடுக்கவேண்டும், அரசு தொகையை அறிவித்த பிறகுதான், கல்விக் கட்டணத்தை வசூல் செய்யவேண்டுமென்ற நிலையைச் சொன்ன பிறகும்கூட, பல பள்ளிகள் கல்விக் கட்டணத்தை அதிகமாக உயர்த்தி, கல்விக் கொள்ளையாகவே நடத்தி, இன்று பணம் எல்லாம் வசூல் செய்து, admission-ஐயே துண்டுச் சீட்டில் எழுதி எல்லாவற்றையும் முடித்துவிட்டார்கள்.

அதேபோல, சமச்சீர்க் கல்வியைப் பொறுத்த அளவிலும் இப்போது தீர்ப்பு வந்திருக்கிறது. ஒன்றாம் வகுப்பு, ஆறாம் வகுப்பிற்கு மட்டும்தான் இந்த சமச்சீர்க் கல்வி அமல்படுத்தப்படவேண்டுமென்றும், மற்ற வகுப்புகளுக்கெல்லாம் இப்போது நம்முடைய அரசு, ஏற்கெனவே எந்தெந்தப் பாடப்

புத்தகங்களை நீங்கள் வைக்கப் போகிறீர்கள் என்பது குறித்து தனியார் பள்ளிகளோடு கலந்து பேசி, பிறகுதான் முடிவெடுக்கவேண்டுமென்று சொன்ன பிறகு, இப்போது அந்தத் தனியார் மெட்ரிகுலேசன் பள்ளிகளின் உரிமையாளர்களெல்லாம் ஒன்று சேர்ந்து, அரசுக்கே சவால் விட்டிருக்கிறார்கள். இது மாணவர்கள், பெற்றோர்கள்தான் எந்தப் படிப்பைப் படிக்கவேண்டும்—மெட்ரிக் படிப்பைப் படிக்க அவர்களுக்கு உரிமையிருக்கிறது. ஆகவே, அரசு இதிலே தலையிடக்கூடாது என்றும், கல்விக் கட்டணத்தை நாங்கள்தான் முடிவு செய்வோம்; அரசு முடிவு செய்யக்கூடாது என்றும் பேட்டி அளித்திருக்கிறார்களே, இது குறித்து அமைச்சர் அவர்கள் அவைக்கு என்ன விளக்கம் தரவிருக்கிறார்? இப்படிக் கல்விக் கட்டணத்தை அதிகமாக வசூலித்துக்கொண்டிருக்கிற பள்ளிகள் மட்டுமல்ல, கல்லூரிகளிலும் இதேபோன்று கட்டணங்களை அதிகமாக—Capitation Fees எல்லாம் வசூல் செய்து பெரிய அளவில் கொள்ளை இலாபம் அடித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு அரசு என்ன பாடத்தைக் கற்பிக்கப் போகிறது என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *9-50*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒவ்வொரு கட்சிக்கும் வாய்ப்புக் கொடுக்கும் அளவுக்கு நேரம் இல்லை. உட்காருங்கள். திரு. ஞானசேகரன் அவர்கள்தான் விளக்கமாகச் சொல்லிவிட்டாரே! செல்வி பாலபாரதி, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பள்ளிகளிலே அதிகமாகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன என்று இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டு, அதனுடைய அடிப்படையிலே Tamil Nadu Schools (Regulation of Collection of Fees) Act என்று *2009* ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். அந்தச் சட்டத்தினுடைய அடிப்படையில், ஓய்வுபெற்ற நீதியரசர் கோவிந்தராஜன் அவர்களுடைய தலைமையிலே குழு ஒன்று கடந்த டிசம்பர் மாதம் *7* ஆம் தேதியன்று அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு பள்ளிகளிலே, ஒவ்வொரு

2010 மே 7] [திரு. தங்கம் தென்னரசு]

பள்ளியும் எந்தெந்தவிதமான கட்டணங்களை வசூல் செய்ய வேண்டுமென்று நிர்ணயிக்கக்கூடிய அந்தக் குழு ஏறத்தாழ 15 முறைக்கு மேல் கூடி, இன்றைக்கு அவற்றையெல்லாம் நிர்ணயம் செய்து, மிக விரைவிலே அந்தக் கட்டணங்களைத் தெரிவிப்பதற்கு இருக்கிறார்கள்.

இதற்கு மத்தியிலே கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் தேதி, அரசின் சார்பில் பள்ளிக்கூடங்களிலே இந்தக் கட்டணம் நிர்ணயிக்கப்படுவதற்கு முன்பாக மாணவர்கள் சேர்க்கை செய்யக்கூடாது என்று ஒரு சுற்றறிக்கையையும் அனுப்பியிருந்தோம். அதற்குப் பிறகு நீதிமன்றத்திலே விவாதங்கள் வருகிறபோது, பள்ளிகளின் தரப்பிலே என்ன சொன்னார்கள் என்றால், நாங்கள் மாணவர்களைச் சேர்க்கிறபோது எவ்வளவு மாணவர்கள் சேர்கிறார்கள் என்பதை வைத்துத்தான் பள்ளியினுடைய other infrastructural facilities-ஐ தீர்மானம் செய்ய முடியும், எனவே, சேர்க்கைக்கு அனுமதி வேண்டும் என்று கேட்டார்கள். அதனுடைய அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கையை மாத்திரம் நீங்கள் செய்யலாம், ஆனால், கட்டணங்களை வசூலிக்கக்கூடாது என்று திட்டவட்டமாக கடந்த பிப்ரவரி மாதமே அவர்களுக்கு ஒரு circular அனுப்பியிருந்தோம். இதற்கு நடுவிலே, கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் தேதி, நீதிமன்றத்திலே நமக்கு சாதகமாகத் தீர்ப்பும் வந்திருக்கிறது. இந்தச் சட்டம் செல்லுபடியாகும் என்று அதை நிலைநிறுத்தி இன்றைக்கு உயர் நீதிமன்றமும் ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. இதனுடைய அடிப்படையில் எந்தெந்தப் பள்ளிக்கூடங்கள், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும்—ஏறத்தாழ தமிழகத்திலே 10,951 சுய நிதிப் பள்ளிக்கூடங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களில் இதுவரை 10,233 பள்ளிகள் தாங்கள் என்ன கட்டணங்களை வசூலிக்கிறோம் என்பதைக் குறித்து இந்த கமிட்டியிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 700 பள்ளிகள் இதுவரை கொடுக்கவில்லை. அவர்களையும் கொடுக்கச் சொல்லி நாங்கள் இப்போது தாக்கீதுகள் அனுப்பியிருக்கிறோம். மிக விரைவில், இன்னும் நான்கைந்து நாட்களுக்குள்ளாகவே அந்தக் கட்டணங்களையெல்லாம் நிர்ணயம் செய்து நீதிபதி கோவிந்தராஜன் அவர்களுடைய தலைமையிலே இருக்கக்கூடிய குழு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் அதை அனுப்பி வைத்து, அவர்களுடைய கருத்துகளைப் பெற இருக்கிறோம். இதற்கு

மத்தியிலே நான் இந்த அவையின்மூலமாகத் தெரிவித்துக்கொள்வது, நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைவிட கூடுதலாக எந்தப் பள்ளியாவது வசூலித்திருந்தால், சட்டத்திலே என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த வழிவகையின்படி அந்தப் பள்ளியின்மீது அரசு நிச்சயமாக நடவடிக்கையினை மேற்கொள்ளும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர். (குறுக்கீடு) இன்றைக்கு அவ்வளவுதான். எல்லாம் முடிந்துவிட்டது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உட்காருங்கள். திரு. பெ.சு.விஜயகுமார்.*

திரு. பெ.சு. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை 2009-2010 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஒன்பதாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

3. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010-2011 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 6-5-2010 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை பற்றிய மானியக் கோரிக்கை மற்றும் அதன்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்திற்கு பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*